**செய்தி வெளியீடு எண் : 445** **நாள் : 03.03.2023**

**நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் இன்று (03.03.2023) நடைபெற்ற விழாவில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் மார்பளவு திருவுருவச் சிலையை திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவை தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அண்ணன் திரு.பொன்முடி அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் சகோதரர் திரு.மதிவேந்தன் அவர்களே, முன்னிலை வகிக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அவர்களே, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு.இராமலிங்கம் அவர்களே, வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் ஐ.ஏ.எஸ்., அவர்களே, கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர் இராமலட்சுமி அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள கல்லூரி முதல்வர் முனைவர் பாரதி அவர்களே, நாமக்கல் நகர்மன்றத் தலைவர் கலாநிதி அவர்களே, துணைத் தலைவர் பூபதி அவர்களே, நகர்மன்ற உறுப்பினர் கிருஷ்ணலட்சுமி அவர்களே, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளையின் தலைவர் சுரேஷ் அவர்களே, உறுப்பினர்களே, பேராசிரியப் பெருமக்களே, இங்கு பெருந்திரளாகக் கூடியிருக்கும் என் அருமை சகோதரிகளே, தங்கைகளே, அனைவருக்கும் வணக்கம்.

நாமக்கல் கவிஞர் பெயரிலான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நாமக்கல் கவிஞர் திருவுருச்சிலையை திறந்து வைத்து, உரை ஆற்றுவதில் பெரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மிகப்பெரிய ஆளுமையின் சிலையை திறந்து வைக்கும் வாய்ப்பை இந்த எளியவனுக்கு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் கவிஞர் இந்த வளாகத்தில் வெறும் சிலையாக மட்டுமல்ல தமிழாக அவர் எழுந்து நிற்கிறார்.

நாமக்கல் கவிஞருக்கு இந்த சிலையை அமைத்ததன் மூலம் நாம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்குப் பெருமை ஏற்படுத்தியுள்ளோம். நாமக்கல் என்றால் முதலில் நினைவுக்கு வரக்கூடிய அடையாளமாக இருக்க கூடியவர்தான் நம்முடைய

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். அவர்களின் குடும்பத்தினரும் இங்கு வந்துள்ளார்கள் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். அவர் நாமக்கல் மாவட்டத்தின் அடையாளம் மட்டுமல்லமால் ஒட்டு மொத்த தமிழ் மொழியின் அடையாளங்களிலும் ஒருவராக திகழ்ந்தவர். 1888–ம் ஆண்டு அன்றைய சேலம் மாவட்டம் மோகனூரில் வெங்கட்ராம பிள்ளை – அம்மணி அம்மாள் ஆகியோருக்கு மகனாக பிறந்தவர். எளிமையான குடும்ப பின்னணி. ஆனால் தன் வலிமையான தமிழ்ப் புலமையால் கவிதைகள் எழுதி புகழ்பெற்றவர். தமிழை அழகியலுக்காக பயன்படுத்தால் விடுதலைக்காக முழுமையாகப் தமிழ் மொழியினை பயன்படுத்தியவர். அவர் சிறந்த பேச்சாளரும் கூட. அவருடைய மேடை பேச்சுகள் சாதாரண மக்களிடையே விடுதலை போராட்ட உணர்வை ஏற்படுத்தியது. காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரின் வழியில் பயணித்தவர். 1921 முதல் 1930– வரை நாமக்கல் மாவட்டத்தில் காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவராக இருந்து சுதந்திரத்திற்காகப் போராடினார். கரூரிலிருந்த போது, அங்கும் காங்கிரஸ் பேரியக்கத்தை ஆரம்பித்து, 10 வருடக்காலம் முழுவதும் காங்கிரஸ் வளரப் பாடுபட்டார். கரூரிலிருந்த போது காந்தியடிகளின் அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார். அங்குள்ள அமராவதி ஆற்றங்கரையில் எண்ணற்ற காங்கிரஸ் கூட்டங்களை நடத்தினார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகத்தை அறிவித்த போது நாடு முழுவதும் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. அதில் வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக போரட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் கலந்து கொண்டவர் தான் நாமக்கல் கவிஞர். அப்போதுதான், 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற தேசபக்தி பாடலையும் இயற்றித் தந்தார். அந்த பாடல் ஏற்படுத்திய விடுதலை போராட்ட உணர்வு என்பது மிக அதிகம்.

பின்னர் ஒருநாள் நாமக்கல் கவிஞர் காந்தியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்த போது, காந்தி அவர்களே, இந்த பாடலை குறிப்பிட்டு நாமக்கல் கவிஞரை வாழ்த்தியுள்ளார். தன் கொள்கை உறுதியாலும் தொடர் போராட்ட வாழ்வாலும் காந்திய கவிஞர் என பாராட்டப்பட்டவர். 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' எனப் பாடிய நாமக்கல் கவிஞரின் பல பாடல்கள் நம் அனைவருக்கும் பிடிக்கும். அதில் தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு அமிழ்தம் அவனுடை மொழியாகும் அன்பே அவனுடை வழியாகும்" இப்படி தமிழர் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட நாமக்கல் கவிஞரை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது நம் கடமையாகும். இது அனைத்தையும், அனைவரையும் மறந்து கொண்டே இருக்கக் கூடிய நம் சமூகம். முதல்வராக்கியவரையே யார் என்று கேட்கக்கூடிய உலகம்.

நாமக்கல் கவிஞர் அவர்கள் மக்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வை ஊட்டும் கவிதைகளை எழுதியவர். இந்திய விடுதலைப் போரட்டத்தில் பங்கெடுத்தவர் என்ற உண்மையை சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். வரலாற்றையே வாட்ஸ் அப் மூலம் மாற்றி எழுதிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் நம் முனனோர்களை போற்றுவது நம் கடமை. அந்த வகையில் சாதாரண ஒரு ஹெட் காண்ஸ்டபுள் மகனாக பிறந்த நாமக்கல் கவிஞரின்

பெயரில் தான் இன்று தமிழ்நாட்டின் மூளையாக செயல்படக்கூடிய தலைமைச் செயலகம் கட்டடம் அமைந்துள்ளது. உங்களுக்கு எல்லாம் தெரியும் என நினைக்கிறேன். ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் உள்ள தலைமைச்செயலக கட்டடத்திற்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என பெயரை வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் தான். தாத்தா பெயர், நான் சிலை இந்தக் கல்லூரிக்கும் கவிஞரின் பெயரை சூட்டியது முத்தமிழறிஞர் கலைஞர் தான். கலைஞர் பெயர் வைத்த கல்லூரியில் அவரின் பேரன் கவிஞருக்கு சிலை திறக்கிறேன்.

இந்த சிலை அவ்வளவு எளிதாக இங்கு வைக்கப்பட்டு விட வில்லை, கிட்டத்த 20 ஆண்டுக்கால கோரிக்கைக்குப் பிறகு நாமக்கல் கவிஞரின் சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது. கவிஞரின் குடும்பத்தினரின் பல்லாண்டு கால கோரிக்கை இது. அது இப்போது கழகத் தலைவர் ஆட்சியில் அந்த கோரிக்கை நிறைவேறியுள்ளது. கோரிக்கை பல ஆண்டுகளாக நிறைவேறாத நிலையில், அவருடைய குடும்பத்தை சார்ந்தவர்கள், தனியார் இடத்திலாவது சிலை அமைத்து தரும்படி கோரிக்கை அளித்தனர். ஆனால், தனியார் இடத்தில் வைப்பது எப்படி கவிஞருக்கு பெருமையாக இருக்கும். முதலமைச்சர் கல்லூரி போன்ற இளம் தலைமுறையினர் அதிகம் கூடும் இடத்தில் வைத்தால் தானே காலத்திற்கும் புகழ் நிலைத்து நிற்கும் என சொல்லி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த சிலையை இங்கு அமைத்துத் தந்துள்ளார்கள். மாணவிகளுக்கு வேண்டுகோள் நம் முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல முன்னோடி திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியும். இதில் ஒரு சிலத் திட்டங்களை கூறி ஆக வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை கொண்டு வந்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மாணவ – மாணவிகளை பள்ளிக்கு வர வைக்க, முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம். 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை படிக்கும் 2 இலட்சம் அரசு பள்ளி மாணவ மாணவிகள் பயனடைந்து வருகிறார்கள். பொறியியல் கல்லூரியில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு, அவர்களுக்கான கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்பது, அரசுப்பள்ளியில் படித்துவிட்டு கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கும் 'புதுமைப்பெண் திட்டம் இப்படி பல திட்டங்கள்.

இந்தத் திட்டங்களை பற்றியெல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டு நீங்களும், உங்கள் மூலம் பிறகும் தெரிந்துகொள்ளும் வகையில் நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

பெண்கள் முன்னேற இருக்கும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே. அதுவும் பத்தோடு பதினொன்றாக படிக்காமல், நாம் என்னவாக வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஆழ்மனதில் ஒரு எண்ணம் இருக்கும். முதலில் அது என்ன என்று நீங்கள் தெரிந்துக் கொள்ளுங்கள். அதை நோக்கி உழைக்கத் தொடங்குங்கள். உங்களால் முடியாதது இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது. அப்படி உங்களின் முயற்சியில், உங்களின் வளர்ச்சியில் ஒரு அண்ணனாக இருந்து, உங்களுக்கு உதவ நான் காத்திருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இந்த சிலையை திறக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய அண்ணன் பொன்முடி அவர்களுக்கும், ராஜேஷ் உள்ளிட்ட அனைவருக்கும், நாமக்கல் கவிஞரின் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கும் என் அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியை முன்னெடுத்தவர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும் என் அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன். வாழ்க நாமக்கல் கவிஞரின் புகழ், நன்றி வணக்கம் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், இ.ஆ.ப., அவர்கள், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.ராமலிங்கம் அவர்கள், நாமக்கல் நகர் மன்ற தலைவர் திரு.து.கலாநிதி அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்கள், கல்லூரி கல்வி இணை இயக்குநர் (தருமபுரி மண்டலம்) முனைவர் நா.இராமலட்சுமி அவர்கள், கல்லூரி முதல்வர் (பெறுப்பு) முனைவர் தி.பாரதி அவர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in